
# SOLT

**STUDENT ORGANISATION OF LIBERATION TIGERS**
(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX.)


15 ஆகஸ்ட் 1985 | வேட்டு 2 | அன்பளிப்பு-50P


## போர் நிறுத்தத்தை மீறி ஆயுதம் ஏந்திவரும் ராணுவத்திடம்

# நாங்கள் சரண் அடையவேண்டுமா?

## விடுதலைப் புலிகள் ஆவேசக் கேள்வி



எம் மக்கள் சிந்திய உதிரம் மறந்து
இருட் சிறையில் துயர் உண்ணும் தோழர் நிலைமறந்து
எம் நகர சந்திகளில்-சாலைகளில்
ஓடும் ஓடங்களில் வேதனையின் உச்சத்தில்
எதிரியிடம் இரக்கம் வேண்டி
கெஞ்சி அழுது உடல் சிதைந்து
மாண்ட பிஞ்சுகளின் பேதைகளின்—இறுதி
அவல ஒலி மறந்து வீதி நடுவே துயில் இழந்து
ஓலமிட்டு கதறிய எம் சகோதரிபர் நிலைமறந்து
ஆயுதம் ஏந்து வழியெல்லாம் செய்த ஈனரிடம்
எம்மக்கள் குருதியில் குளித்த ராணுவத்தின்
கரம் பற்றி கைகுலுக்கி பந்தாட, சேர்ந்து களி கொள்ள
நாம் என்ன மானம் மறைந்த மந்தைகளா?

போர் நிறுத்தத்தை மீறி ஆயுதம் ஏந்தி எங்களை வேட்டையாட வரும் சிங்கள ராணுவத்திடம் நாங்கள் சரண் அடைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களா என்று விடுதலைப்புலிகள் ஆவேசமாக கேட்டுள்ளனர்.

### போர் நிறுத்தம்

இலங்கை அரசின் ஆயுதப் படைகள் போர் நிறுத்தத்தை மீறிச்செயல்பட்ட போதிலும் ஜூன் 18-ந் தேதியிலிருந்து நாங்கள் போர் நிறுத்தத்தை முறையாகக் கடைபிடித்து வருகிறோம். அதனால் எங்களுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

போர் நிறுத்தத்திற்குப் பிறகு எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். சிங்கள ராணுவத்தின் அத்துமீறிய செயல்கள் காரணமாக எங்கள் இளைஞர்கள் சிலர் குண்டுக் காயங்களுடன் தப்பி வந்துள்ளனர். யுத்த நிறுத்த காலத்தில் ஆயுதங்களைப்பயன் படுத்தக்கூடாது என்கிற எங்களது கட்டளையையேற்று தங்கள் உயிரையே எங்கள் இளைஞர்கள் பணயமாக்கி வருகிறார்கள்.

நிலைமை இவ்வாறிருக்க இலங்கை அரசு பொய் பிரசாரத்தில் ஈடுபட்டுவருகிறது. விடுதலைப் புலிகள் தான் போர் நிறுத்தத்தை மீறுவதாகவும், அதைச்சமாளிக்கவே ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறி வருகிறது.

இந்திய அரசின் மூலம் ஏற்பட்ட யுத்தநிறுத்தத்தை பயன் படுத்தி விடுதலைப் புலிகளை வேட்டையாடி விடலாம

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

STUDENT ORGANISATION OF LIBERATION TIGERS
(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)

## விடுதலைப்போராட்டத்தில் புதிய திருப்பம்!
## விடுதலை அமைப்புகள் ஒன்றுபட்டன!!

அண்மையில் தமிழீழவிடுதலைப்புலிகளும், ஈழத்தேசிய விடுதலைமுன்னணியும் இணைந்து கொண்டமை யாவரும் அறிந்ததே. நான்கு இயக்கத்தலைவர்களாலும் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்ட ஒற்றுமைக்கான உடன்படிக்கையில் ஐந்து அடிப்படைத் தீர்மானங்களில் ஒற்றுமைப்பட்டு செயற்படுவதென தெரிவித்திருந்தனர். அதேவேளை எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசித்து கூட்டாக முடிவெடுப்பதெனவும் தீர்மானித்தனர்.

எனினும், கூட்டாக பிரச்சாரங்களை மேற்கொள்வது பற்றியோ, அல்லது ஒருமித்த இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியோ, அல்லது கூட்டாக நிதி சேகரிப்பது பற்றியோ ஒற்றுமையில் இணைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளும் ஈழத்தேசிய விடுதலை முன்னணியும் இன்றுவரை எந்தவொரு தீர்மானத்திற்கும் வரவில்லை. முக்கியமாக பின்வரும் விடயங்களில்:

ஒன்று: தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கப்பிரச்சாரம், நிதிசேகரிப்பு ஆகியவற்றில் தொடர்ந்தும் தனித்துவமாகவே இயங்கி வருவதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஈழத்தேசிய விடுதலை முன்னணிக்கும், பொது நிதிக்கான எந்த ஒரு வங்கிக் கணக்கும் இல்லையென்பதையும்,

இரண்டு: இவ் ஒற்றுமையமைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள், ஈழத்தேசிய விடுதலை முன்னணியின் ஓர் அங்கமல்ல. தமிழீழ விடுதலைப்புலிகள் ஈழத்தேசிய விடுதலை முன்னணியோடு சேர்ந்து கொண்டதாகவோ அல்லது ஈழத்தேசிய விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து கொண்டதாகவோ கருதப்பட முடியாததுடன், இவ் ஒற்றுமையமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈழத்தேசிய விடுதலை முன்னணியும் இணைந்துகொண்டுள்ளதென்பதையும்,

மூன்று: தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட எல்லா இராணுவ நடவடிக்கைகளும் தமிழீழ விடுதலைப்புலிகளால் தனித்தே மேற்கொள்ளப் பட்டதுடன், ஈழத் தேசிய விடுதலை முன்னணியுடனோ அல்லது ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் எந்த ஒரு அமைப்புடனோ ஒருமுகப்பட்டோ அல்லது ஒன்று சேர்ந்தோ மேற்கொள்ளவில்லையென்பதையும் தமிழீழ மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"
தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ அறிக்கை.

************************************


### 1ம் பக்கத்தொடர்ச்சி

என்று இலங்கை அரசு எண்ணிச் செயல்படுகிறது.

அமைதியாக இருக்கும் தமிழ் பகுதிகளில் யுத்தகளத்துக்கு தாக்குதலுக்குச் செல்வது போல அணிவகுத்து எங்கள் முகாம்களை சூழ்ந்து தாக்கி எங்களைக் கைதுசெய்ய முயலும் போது நாங்கள் ஆயுதங்களுடன் அவர்களிடம் சரணடைய வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்களா?

இந்திய அரசின் நல்லெண்ண வேண்டுகோளின்படி யுத்தநிறுத்தத்தை இலங்கை அரசுமதிக்கும்பட்சத்தில்ராணுவத்துக்கு எதிராக தாக்குதல் தொடுக்கமாட்டோம்என்று ஏற்றுக் கொண்டோமே தவிர எங்களைவேட்டையாடி அழிக்க எண்ணும் ராணுவத்தினர்முன் ஆயுதங்களைப் போட்டுவிட்டு சரணாகதி அடைய அல்ல என்பதை இலங்கை அரசுக்குத் தெள்ளத் தெளிவாகக் கூறவிரும்புகிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



மணி ஈழம் காக்க மறைந்த
புலிகளே—எங்கள் மனமெல்லாம் நிறைந்தீர்

[illegible]

### காப்டன் ரஞ்சனுக்கு விடுதலைப்புலிகள் அஞ்சலி!

சிங்கள இராணுவத்தால் நிராயுதபாணியாக மோட்டார் சைக்கிளில் செல்லும் போது சுட்டுக் கொல்லப்பட்ட தமிழீழத்தின் வீரமைந்தர்களில் ஒருவரும், தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பிரிவில் காப்டனாக விளங்கி அரிய பல வீர சாதனைகளைப் புரிந்தவருமான க. ஞானேந்திரமோகனுக்கு (ரஞ்சன்லாலா) அவரது ஓராண்டு நினைவு தினத்தையொட்டி 13.7.85 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஓர் பெரிய சுவரொட்டியை தமிழீழ மடங்கும் ஒட்டியுள்ளது. அதில் பின்வரும் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

ரஞ்சனே! இழந்த உன் உயிரை என்
உடலில் காண்கிறேன்; சிறகொடிந்த
உன் விடுதலைப் பறவையை நான் வளர்க்
கிறேன். நீ நினைத்த சுதந்திர கீதத்தை
நான் இசைப்பேன். நீ நடந்த சுவடு
களில் இதோ என் பாதம் பதிக்கிறது"

# சிங்கள ராணுவத்துக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய செல்லக்கிளி



லெப்டினன்ட் செல்லக்கிளி
23.7.83

## இலங்கை தமிழர் விடுதலைக்கு போரிட்டு மாண்ட தளபதி நினைவு நாள்

இலங்கைத்தீவில் தனக்கென ஒரு பாரிய நிலப்பிரதேசத்தில் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்துவரும் தமிழினம் பெரும்பான்மையினரான சிங்கள மேலாதிக்க வாதிகளின் ஆட்சியென்னும் கோரப்பிடிக்குள் சிக்கிக் கடந்த 35 ஆண்டுகளாகச் சொல்லொனா அடக்குமுறைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகி வருகிறது. 1948ம் ஆண்டு பெரும்பான்மையினர் என்ற பெயரில் பிரிட்டிசாரிடமிருந்து ஆட்சியதிகாரத்தைக்கையேற்ற சிங்கள மேலாதிக்க வாதிகள் தமிழர்களின் அடிப்படை உரிமைகளான மொழி, மத உரிமைகளையும் படிப்படியாகப் பறிக்கத்தலைப்பட்டதுடன், பொருளாதார அபிவிருத்தி, கல்வி வேலைவாய்ப்பு என்பவற்றிலும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

இந்த நிலையிலும்கூட தமது உரிமைகளைப்பெற தமிழர்கள் கால்நூற்றாண்டு காலமாக ஒற்றையாட்சி அமைப்புக்குள் சமஉரிமைகோரியே அமைதிவழியில் போராடினர்: ஆனால் தமிழ் மக்களின் நியாயமான, சட்டபூர்வமான கோரிக்கைகள் அனைத்தும் சிங்கள பேரினவாத ஆட்சியாளரால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது. ஒடுக்கப் பட்ட தமிழ் இனத்தின் உரிமைகளுக்கான போராட்டத்தினை மனிதாபிமான அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கு மாறாக சிங்களப் பேரினவாத அரசு இராணுவ அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டு அமைதி முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டங்களை ஆயுதப் படையினர் அடக்குமுறைகள் அடக்கிவிட முனைந்தனர். நிரந்தரமான இராணுவப் பயங்கர வெறியாட்டமும், சிங்களத் தலைவர்கள் தொடர்ச்சியாக இழைத்து வந்த நம்பிக்கைத் துரோகங்களும், சமாதான முறையில் போராடித் தம் உரிமைகளைப் பெற்றுவிட முடியும் எனத் தமிழர்கள் அதுவரை கொண்டிருந்த சகல நம்பிக்கைகளையும் தகர்த்தெறிய வைத்தன. இந்தத் தவிர்க முடியாத சூழ்நிலையில் தமிழ் மக்களிடமிருந்து முகிழ்ந்தெழுந்ததே "தமிழீழ விடுதலை" என்ற உரிமை முழக்கம்.

சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்ட இனப்படுகொலை நடவடிக்கையிலிருந்து தமிழ் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழி இல்லாத நிலையில் தமிழீழ விடுதலையை வென்றெடுக்கப் புரட்சிகர இளைஞர்களிடமிருந்து ஆயுதம் தாங்கியப் புரட்சிகர இயக்கம் கருக்கொண்டது. 1970ம் ஆண்டின் ஆரம்பத்தில் எதேச்சையாக கட்டுப்பாடற்ற முறையில் பிரலாகமெடுத்த தமிழ்த் தீவிரவாத இளைஞர்களின் அரசியல் வன்முறை எழுச்சியானது, புரட்சிகர அரசியற் கோட்பாட்டையும், நடைமுறையையும் கொண்ட புரட்சிகர அமைப்பொன்றை நாடிநின்றது. இந்த அரசியற் சூழ்நிலையில் தான் 1972ம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது. இந்த புரட்சிகர இயக்கம் அதன் இன்றைய தலைவரும், இராணுவத் தளபதியுமான, வேலுப்பிள்ளை பிரபாகரனால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் புதிய தமிழ்ப் புலிகள் என்று அழைக்கப்பட்டு பின் 1976 மே 5ம் நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற புதிய பெயரைச் சூடிக்கொண்டது. இவ்வியக்கம் ஆரம்பத்தில் இயக்க இளைஞர்களை வேட்டையாட முனைந்த போலி உளவுப் படையின் அமைப்பைச் சிதைப்பதிலும், ஒடுக்கு முறையின் ஏஜண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியிலேயே இருந்து கொண்டு இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களை அழிப்பதிலும் ஈடுபட்டது. போலி உளவுப் படை அமைப்பைச் சிதைப்பதில் இயக்கம் பெற்ற வெற்றியானது இயக்க உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் அரசியற் பணிகளில் ஈடுபடுவதையும், பரவலாக கொரில்லாத் தளங்களை அமைப்பதையும் இலகுவாக்கியது. ஆயுதப் படையினரின் அடக்குமுறைகளையும், அச்சுறுத்தல்களையும், தமிழ் இளைஞர்களின் கிளர்ச்சி வளர்ச்சி பெற்று வந்ததைப் பொறுக்க முடியாத ஜெயவர்த்தனாவின் பேரினவாத அரசு, சிங்கள இராணுவம் நடத்திய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கியதைத் தொடர்ந்து ,

* வவுனியா நகரை ஆயுதப்படையினர் தீயிட்டு எரித்தனர். ஏராளமான தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
* திருகோணமலையில் தமிழ் மக்கள் மிலேச்சத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக் கணக்கான வீடுகள் எரிக்கப் பட்டன. தமிழ்க் கோவில்கள் தரைமட்டமாக்கப்பட்டன.
* யாழ்ப்பாணத்தில் ஆயுதப்படையினர் தமிழ் இளைஞர்களைச் சுற்றி வளைத்துச் சுட்டுக்கொன்றனர்.

சிங்கள இனவாத அரசின் தமிழினத்தைத் துவேசம் செய்யும் நாசகாரத் திட்டம் உச்சகட்ட நிலையில் செயற்பட ஆரம்பித்தது. பொங்கிப்பிரவாகமெடுத்த அரசப்பயங்கரவாதத்தை தடுத்துநிறுத்த, அடக்குமுறையில் ஈடுபடும் சிங்கள இராணுவத்துக்குப்பதிலடி கொடுக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் படைப்பிரிவொன்று (23.7.83அன்று) கொரில்லாத்தளபதி லெப்டினன் செல்லக்கிளி தலைமையில் களத்தில் இறங்கியது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிங்கள இராணுவப்படையுடன் தமிழ் இளைஞர் இயக்கம் நேருக்குநேர் மோதி வெற்றிகொண்ட முதல் நிகழ்வு இது.

மாதகல் இராணுவமுகாமைச் சேர்ந்த 15 சிங்கள இராணுவத்தினர்

### வாழ்வும் வரலாற்று நினைவுகளும்

சிங்கள நண்பனே!
என்னைக் கொல்லுவதைவிடக்
கொடியதொன்றுண்டு.

அது
நான் நடந்த சுவடுகளை அழிப்பது

என்னை அழியவிட்டும்
என் சுவடுகளைக் காப்பேன்!
என் சுவடுகளே
என் பின்னவர்க்கு ஆவணம்!

இங்கு எமது இருப்பை
எமக்குள்ள உரிமையை
இவையே உறுதிப்படுத்தும்!

எமது கண்ணீர்
எமது குருதி
எமது வியர்வை
எமது திறமை
எல்லாம் இவற்றிலே தேங்கியிருக்கும்!
இவற்றை நீ அழிக்க
என்றைக்கும் இணங்கேன்.

இவற்றை அழித்து
உன் விதைகளை நீ விதைக்க நினைக்கிறாய்!
உன் கற்களை நீ ஊன்ற நினைக்கிறாய்!

ஒன்றை மட்டுமே
மனத்தில் இருத்து :
அழிப்பு நீ மட்டுமே அறிந்ததன்று
நானும் அறிந்ததுதான்.

இரணியன்

தொடர்ச்சி 4ம் பக்கம்

டிரக் வண்டியும், ஜீப்புமாக பலாலி யாழ்ப்பாணம் வீதியூடாக திருநெல்வேலி என்ற இடத்தை அடைந்தபோது தயார்நிலையிலிருந்த லெப்டினன்ட் செல்லக்கிளி தலைமையிலான விடுதலைப்புலிகளின் கெரில்லா அணி வைத்திருந்த நிலக்கண்ணி வீதியில் பயங்கரமாக வெடித்தது. அதைத்தொடர்ந்து சடுதியாக நின்ற இராணுவடிரக் வண்டியிலிருந்து சிங்கள இராணுவத்தினர் பீதியினால் குதித்தனர். அச்சத்திலும், திகிலிலும் நின்ற சிங்கள இராணுவத்தினரால் புலிகளுடன் தாக்குப் பிடித்து நின்று போராடமுடியவில்லை. ஒருவரின் பின் ஒருவராக புலிகளின் இயந்திரத் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகினர். இராணுவரீதியில் நன்கு திட்டமிட்ட புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கெரில்லாத் தாக்குதலில் 13 சிங்கள இராணுவப்படையினர் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தனர்.

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்த இத்தாக்குதல் சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களை சந்திக்க புலிகள் தயாராகி விட்டார்கள். திட்டமிட்ட முறையில் விடுதலைப்புலிகள் மக்கள் இராணுவம் ஒன்றைக் கட்டியெழுப்பியிருக்கிறார்கள் என்ற செய்தியை உலகெங்கும் அறியவைத்தது. சிங்கள இராணுவத்தை நேருக்குநேர் சந்தித்து நடந்த தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்ல அணிக்கு தலைமை தாங்கிய மாவீரன் லெப்டினன்ட் செல்லக்கிளி, அக் களத்திலேயே சிங்கள இராணுவத்தினரின் துப்பக்கிக் குண்டை மார்பில் ஏற்று வீரமரணம் அடைந்தான். இத்தாக்குதலின் பின்தான் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. வெளிநாடுகளில் வேலைபார்த்துக் கொண்டிருந்த ஈழத்தமிழ் இளைஞர்கள் நேரடியாகக் களத்தில் வந்து இறங்கியதும், அமைதி வழியில் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதும், வெளிநாடுகளில் உள்ள தமிழர்களிடமிருந்து போராட்டத்திற்கு பெருமளவில் பொருளாதார உதவிகள் கிடைத்ததும் இத்தாக்குதல் நிகழ்வின் பின்தான்.

ஈழத்தமிழர் பிரச்சனையை உலக அரங்குக்குக் கொண்டுவந்த இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதல் நடந்து இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. வரலாற்றுத் திருப்பு முனையை ஏற்படுத்திய மாவீரன் லெப்டினன்ட் செல்லக்கிளியின் 2வது நினைவு தினம் 23.7.85 அன்று ஆகும்.

தமிழீழ விடுதலைப்புலி இயக்கத்தின் தலைசிறந்த கெரில்லா தளபதியான லெப்டினன்ட் செல்லக்கிளியின் இயற்பெயர் செல்வநாயகம். கல்வியங்காட்டைப்பிறப்பிடமாகக் கொண்ட இந்த மாவீரன் அம்மான், செல்லக்கிளி, சந்திரன் என்ற புனை பெயர்களில் அழைக்கப்பட்டவன். தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கத்தலைவர் பிரபாகரன் மீது அன்பும், மதிப்பும், விசுவாசமும் கொண்டவன். பிரபாகரனுக்கு ஏற்பட்ட சோதனையான காலகட்டங்களில் அவருக்கு உறுதுணையாக நின்றவன். இயக்கம் தொடங்கிய காலத்திலிருந்தே பல போராட்டக் களங்களை கண்டவன். கெரில்லாப் போர் முறைகளில் நிறைந்த அனுபவமும் மன உறுதியும், தைரியமும் படைத்தவன்.

சித்திரவதைக்கும், கொடுமைக்கும் பெயர்போன போலீஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை தனது போலீஸ் கோஸ்டியுடன் 7.4.1978 அன்று புலி இயக்கத்தின் பயிற்சி முகாம் ஒன்றைத் திடீரென முற்றுகையிட்டபோது, அதனை முறியடித்து சாதனை இவனேயே சாரும். போலீஸார் கொண்டு வந்த இயந்திரத் துப்பாக்கி ஒன்றைப் பறித்து, அவர்களைச்சுட்டுக் கொன்று இயக்கத்திற்கு அன்று ஏற்பட்ட பேராபத்தைத் தவிர்த்து, இயக்கத்திற்குப் பெயரீட்டிக் கொடுத்தவன், லெப்டினன்ட் செல்லக்கிளி.

விடுதலைப்புலி இயக்கத்தின் பல்வேறு வெற்றிகரமான கெரில்லாத்தாக்குதல்களுக்கு முன்னணி வகித்த இவனை இயக்க உறுப்பினர்கள் 'அம்மான்' என்றே அழைப்பது வழ ்ம். வறுமை காரணமாக பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்திக்கொண்ட இவன், இயக்கத்தின் முழுநேரப் போராளியாகத் தன்னை அர்ப்பணித்தவன். இவன், துப்பாக்கிகளை குறிப்பாக இயந்திரத் துப்பாக்கிகளைக் கையாள்வதில் மிகவும் சாமர்த்தியசாலி. அனைத்து வாகனங்களையும் மிகத் திறமையாகச் செலுத்தும் அபூர்வமான சாரதியான இவன், தொழில் நுட்ப வேலைகளில் வியப்பூட்டும் ஆற்றல் படைத்தவன். அந்த உயரிய இலட்சியப் பாதையில் தன்னுயிரையே அர்ப்பணித்த ஒரு உன்னதமான விடுதலைவீரனின் நினைவு தினம், 23.7.85 அன்று ஆகும். இந்த வீரமறவனது தன்னலமற்ற உழைப்பும் தியாகமும் என்றும் தமிழ் மக்களால் நினைவில் நிறுத்தப்படும்.

## புலிகள் நாங்கள்

புலிகளின் தாகத்தைப்...
புரிந்திடுங்கள்...எம்...
பகைவனின் பாவத்தைப்...
பகைத்தெழுங்கள்!
பலியிடும் களமெனத்...
தாய்நிலம் போகவும்...
பார்த்திருப்போமோ!
புறப்படுங்கள்!

மலிந்த பொருளாய்த்...
தமிழரின் மானத்தை...
மிதித்திடும் கொடிய...
எதிரியின் ஈனத்தைக்...
களைந்திட வாரீர்...
ஒரு கரந் தாரீர்!
எழுந்திடுவீர்...இன்னும்...
நித்திரை தானோ?

விடிந்ததே...இன்று..,
விடிந்ததே...எங்கள்
விடுதலைப் புலிகளின்...
நெஞ்சினில் விடுதலை...
தெரிந்ததே...நாளைய,..
தமிழீழம்...அங்கு...
எரிந்ததே...சுதந்திர...
மணித் தீபம்!



## சூளுரை !

வீரப் புலிகளை.. வீழ்த்திடத் துடிக்கும்...
சூரப் புலிகாள்...கேளுங்கள்!
ஆரத் தழுவிட....நாமுள்ளோம்...அவர்...
போரைத் தொடர்ந்திட....நாமுள்ளோம்!

வீரத் தழும்பதில்...வளரும் இளைஞர்...
வெறியர் பிடியினில் என்றும் அழியார்!
கோரக் கொலைஞர்... நீரெம்முடலைக்
கொன்றே தீய்க்கினும்...புத்துயிர் பெறுவோம்!

கடலின் நடுவே...தமிழன் உரிமைக்
குரலை...அமுக்கத் துடிக்கும் கயவர்!
உலகின் திசையில் இளைஞர் படைகள்...
முளைக்கும் நிலையைத் தடுக்கப் போமோ?

இடமும்...வலமும்..,மேலும் கீழும்...,
தமிழர் படையின் கிளைகள் தாமே!
நிலமும்...மொழியும்... நிறுவும் வரையில்...
உளமும்... உயிரும்...ஓய்ந்திடப் போமோ?

# 'மக்கள் ரசனையும் திரைப்படப்பெயர்களும்'

யாழ்நகர்,
வடபகுதியில் இயங்கி வரும் சில தீவிரவாத இயக்கங்களுக்கு பொதுமக்கள் திரைப்படங்களின் பெயர்களைச் சூடி ரசிக்கின்றனர். இப்பொழுது அவ்வியக்கங்களின் நடவடிக்கைகளை நீண்டகாலமாக அவதானித்து வந்ததன் பேறு பேறாகவே இவ்விதம் திரைப் படப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.
விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அலைகள் ஓய்வதில்லை என்றும், விடுதலை கழகத்திற்கு விடியும்வரை காத்திரு என்றும், விடுதலை முன்னணிக்கு பயணங்கள் முடிவதில்லை என்றும், விடுதலை இயக்கத்திற்கு தூறல் நின்று போச்சு என்றும் செம்படை இயக்கத்திற்கு மௌன கீதங்கள் என்றும் இதர உதிரி இயக்கங்கள் நாலு கில்லாடிகள் எனவும் பெயர் சூட்டப்பட்டுள்ளன.

# STUDENT ORGANISATION OF LIBERATION TIGERS

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)

## தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கம் (பிரித்தானியக் கிளை)

### பெருமையுடன் வழங்கிய கலை நிகழ்ச்சி

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கத்தின் சார்பில் 4/8/85 அன்று மாலை ஐந்து மணிக்கு நடாத்தப்பட்ட "கலை நிகழ்ச்சி" யில் இடம்பெற்ற நிகழ்ச்சி நிரல் .

தமிழீழத்தில் உயிர்நீர்த்த தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கும் சிங்கள இராணுவத்தாலும் சிங்களக்காடையராலும் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித்தமிழ் மக்களுக்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.
முதலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கத்தின் பிரித்தானியக் கிளையினது மத்தியகுழு உறுப்பினரின் வரவேற்புரை இடம்பெற்றது.
இவ் வரவேற்புரை கீழே தரப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாகத்தில் இணைந்து செயலாற்ற முன்னிற்கும் மாணவர் அமைப்பான விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கத்தின் சார்பில் உங்களெல்லோரையும் 'வருக' 'வருக' என வரவேற்கின்றேன்.
( STUDENT ORGANISATION OF LIBERATION TIGERS ) SOLT எனச் சுருக்கமாகக் குறிப்பிடப்படும் எங்கள் இந்த மாணவர் இயக்கம் தமிழீழ விடுதலைக்கு தார்மீக ஆதரவு வழங்குவதுடன் ஒடுக்கப்படும் உலகமக்களுக்காக உழைத்தல், எமது தமிழீழ விடுதலைப்போராட்டத்திலும், தமிழ்த்தேசிய விழிப்புணர்ச்சிப் போராட்டத்திலும் இளைய தலைமுறைகளைக் குறிப்பாக மாணவ சமுதாயத்தைப் பங்குபற்றச்செய்தல் போன்ற பணிகளை முன் வைத்து தனது பங்கினைச் செலுத்தி முன்னிற்கின்றது.
தமிழகத்தில் 16/3/85 அன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் நேச அமைப்பான SOLT இன் கீழே பல கல்வி கலை நிறுவனங்களைச்சேர்ந்த மாணவர்கள் எமது தமிழீழத் தேசத்தையும் , எமது புரட்சிகர விடுதலை இயக்கங்களையும் அங்கீகரித்து ஆதரித்து விடுதலைப் புலிகளின் மாணவரங்கமாக தொழிற்பட்டு வருகின்றார்கள். அவர்களின் நேரடியான பொறுப்பில் உலகின் பல் வேறு நாடுகளிலும் வசிக்கும் தமிழ் மக்களையும், மாணவர்களையும் பங்குபற்றக்கூடியவாறு கிளையமைப்புக்களை உருவாக்கும் மேலான நோக்கத்தோடு எமது தாய் இயக்கமான SOLT (தமிழ்நாடு) செயலாற்றி வருகின்றது.
இந்த நிலையில்தான் பிரித்தானியாவில் வசிக்கும் தமிழ் மாணவ சமதாயமும் இவர்களுடன் இணைந்து செயலாற்ற முன்னின்ற ஒரே காரணத்தினால் 16/5/85 அன்று விடுதலைப் புலிகளின் பாதையில் உறுதியான பற்றும் முழு நம்பிக்கையும் கொண்ட மாணவர்களால் இங்கு இந்தக்கிளை அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.
எமது இந்தக் கிளையானது கலை, கலாச்சாரப் பண்பாட்டு ஊடகங்களை எமது விடுதலைப் பாதையிலும், சமூக பொருளாதார அரசியல் விழிப்புணர்ச்சிக் கொள்கை விளக்கத்துறையிலும் படரவிட்டு, எமது தமிழீழ விடுதலை நோக்கிய விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பையும் , ஆதரவையும் தர நிற்கின்றது.

இங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதித்துவ அமைப்பாக தமிழர் மறுமலர்ச்சிச் சங்கம் இயங்கிவரும் அதேவேளையில் தமிழகத்தில் இருந்து செயல்படும் தாய் SOLT இன் கிளையமைப்பாக அவர்களின் கட்டுப்பாடு ஒழுங்குகட்கு உட்பட்டு எமது அமைப்பு இங்கே இயங்கிவர முன்னிற்கின்றது. எத்தனை திசைகளில், எந்த நிலைகளில், எத்தனை துறைகளில் நாம் இயங்கினாலும் நமது நோக்கும் பணியும் ஒரு சோசலிசத் தமிழீழத்தை நோக்கியே அமையும் என்பதனையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சுதந்திரப் போராட்டப் பாதையில் நாம் இணைந்து தொழிற்படுவோம் என்பதனையும் உங்கள் முன் கூறிவைத்து எமக்கு உங்களது முழு ஆதரவையும், நல் ஆசியையும் தருமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

"ஒரு நாள் வரும்
எழுது கோல் நிற்கும்
கைகள் ஆயுதம் ஏந்தும்
இலக்கியம் இயல்பாகவே
யுத்தத்திற்கு இட்டுச்செல்லும்
தர்ம யுத்தத்திற்கு இட்டுச்செல்லும்."

"வாழ்க தமிழீழம் ****************************** வளர்க விடுதலைப்புலிகள்"

அதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பரதநாட்டியமும் பக்திமயமான பக்திப்பாடல்கள், உணர்ச்சிமயமான விடுதலைப்பாடல்கள் இசைக் கச்சேரியும், இந்நிகழ்ச்சியைச் சிறப்புறச் செய்தன.

இறுதி நிகழ்ச்சியாக தமிழீழ விடுதலைப் பலிகளின் மாணவர் இயக்க உறுப்பினர்கள் பெருமையுடன் வழங்கிய 'என்ன நடக்கின்றது' என்ற ஓரங்க இசை நாடகம், விழாவினைச் சிறப்புறச் செய்ததுமட்டுமல்லாது அங்கு குழுமியிருந்தவர்களுக்கு தமிழீழத்தின் தற்போதய நிலைமையில் அங்கு ஆயுதமேந்தியுள்ள முற்போக்கு இளைஞர்களின் உயர்ந்த தியாகத்தில் மலரவிருக்கும் சாதி மத பேதமற்ற தமிழீழத்தாயகத்தினைப் பற்றிய ஒரு நல்ல விளக்கத்தினையும் கொடுத்தது.

விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கத்தினது மத்திய குழு உறுப்பினராற்றிய நன்றியுரையுடன் கலை நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

*** புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம் ***

%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%%












## நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்
%%%%%%%%%%%%%%%%%%%

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க பிரித்தானியக் கிளையினர் 4/8/85 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 5.30 மணியளவில் கலைநிகழ்ச்சியொன்றினை நடாத்தினர். எமது விடுதலைப் போராட்டத்தில் மரணமெய்திய வீரவேங்கைகளுக்கு இரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தி விழா ஆரம்பிக்கப்பட்டது. எமது உறுப்பினர் வரவேற்புரையைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. முதலில் பரதநாட்டியமும் அடுத்து விடுதலைப் பாடல்கள் நிகழ்ச்சியும் இடம்பெற்றன. இறுதியாக எமது இயக்க அங்கத்தினர்களால் "என்ன நடக்கின்றது" என்னும் ஓரங்க இசை நாடகம் மேடையேற்றப்பட்டு ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றது எமது அங்கத்தவர் ஒருவரின் நன்றியுரையுடன் கலை நிகழ்ச்சி இனிது நிறைவு பெற்றது.

இதில் கலந்து கொண்டு எம்மை ஊக்குவித்து மகிழ்வித்த ஆதரவாளர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

<u>நன்றி</u>

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்
பிரித்தானியக் கிளை
*************

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க பிரித்தானியக் கிளையினரின் உத்தியோகபூர்வ
8888888888888888888888888888888888888888888888

அறிக்கை
88888

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க மத்திய குழுவினால் எமது மாணவர் இயக்க அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் கீழ் காணப்படுவது போன்ற அங்கத்துவ அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

| முன்பக்கம் | பின்பக்கம் |
|---|---|
| SOLT MEMBER (×7) / SOLT MEMBER (×7)<br>SOLT<br>NO:   EXP.DATE:<br>NAME : | புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்<br>"ஒரு நாள் வரும்<br>எழுது கோல் நிற்கும்<br>கைகள் ஆயுதம் ஏந்தும்<br>இலக்கியம் இயல்பாகவே<br>யுத்தத்திற்கு இட்டுச்செல்லும்"<br>IF FOUND PLEASE RETURN TO: SOLT<br>BM BOX 3694, LONDON WC1 N3XX. |

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க மத்திய குழுவினால், கீழ் காணப்படுவது போன்ற நிழற்படத்துடன் கூடிய அடையாள அட்டைகளின் உரிமையாளருக்கு, இவ் அடையாள அட்டையுடன் செல்லும்போது மட்டும் <u>SOLT</u> இன் சார்பில் நிதி சேகரிக்க <u>அனுமதி வழங்கப்பட்டுள்ளது</u> என உத்தியோக பூர்வமாக அறிவிக்கின்றோம்.

| முன்பக்கம் | பின்பக்கம் |
|---|---|
| NOT VALID WITHOUT PHOTO<br>SOLT<br>SOLT<br>ID.NO:   EXP.DATE:<br>NAME: | புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்<br>இவ் அடையாள அட்டையின் உரிமையாளரி விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பின் சார்பில் நிதிசேகரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார்<br>SOLT<br>SIGNATURE:-<br>IF FOUND PLEASE RETURN TO: SOLT<br>BM BOX 3694, LONDON WC1 N3XX. |

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்
************************



# வீர வணக்கம்

சிதறிய உனது ரத்தம்
பிறந்த மண்ணில் சிந்தியதும் சுடரானது


ஆயிரமாயிரம் மனங்களில் கனன்றது
பற்றியெறிந்து பனையதிர மணல் சிதற
வெளியெங்கும் வெடித்தெழுகிறது பெருந்தீ


தீ கனிந்து சூரியனாகி விடியும்
உன் தாகம் மலர்களாய் சிரிக்க
கனவுகள் உயிர்த்துப் பறவைகளாகும்

கனகரத்தினம் ரஞ்சன் (சைமன்) பொத்துவில்
குணசிங்கராசா துவாரகன் (மயூரன்)
பொன்னையா சந்திரகுமார் (காந்தரூபன்) மட்டக்களப்பு
கதிரவேலு செல்வராசா (மகான்) கம்பர்மலை












நமச்சிவாயம் தருமராசா (ரவி) செம்மலை
சண்முகராஜா பிரபாகரன் (ஜெகன், இடிஅமின்) திருகோணமலை
சதாசிவம் அன்ரனி (சொனி) சாவகச்சேரி
பொன்னையா சண்முகநாதன் (ரஞ்சன், மாமா) கண்டாவளை


கனகு இராசநாயகம் (வேதா, சிவா) கண்டாவளை
தியாகராஜா வரேந்திரன் (தனபாலன்) பரந்தன்
துரைசாமி சிறீமுருகன் (காத்தான்) சாவகச்சேரி
கனகசபை செல்வராசா (கெனடி) மட்டக்களப்பு
கந்தையா ஜெயந்தன் (நிமால்) பருத்தித்துறை

கந்தையா பரமேஸ்வரன் (காந்தி, பாலன்) தம்பலகாமம்
முதுங்கொடுவ உடுகம கேமசிறி (பழசு, வின்சன்ற்) பருத்தித்துறை
பாலசுந்தரம் பாலகணேசன் (சங்கரி) வல்வெட்டித்துறை

# சீறுகிறது, சிங்கள படை!

## மன்னார் பொலிஸ் நிலைய தாக்குதல்

பல்வேறு படிநிலைகளினூடு வளர்த்தெடுக்கப்பட்ட தமிழ் தேசிய விடுதலைப் போராட்டமானது, இன்று தமிழ் பேசும் மக்களின் பூரண பங்களிப்போடு மிகப் பரவலாகவும் துரிதமாகவும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. சிறிலங்கா அரசுக்கெதிரான தாக்குதல்கள் மதவாச்சி வரை பரந்தும் இராணுவ முகாம்கள் வரை விஸ்தரிக்கப் பட்டுமுள்ளன. தீவிர வளர்ச்சி கண்ட எமது போராட்டத்தால் இனவெறி பிடித்த இராணுவம் தமிழீழ பிராந்தியங்களில் இருந்து விரட்டியடிக்கப் படுவது உறுதி.

நெருக்கடியான இச் சூழ்நிலையில் இனவெறி பிடித்த இராணுவத்தாலும் காடையர் கூட்டத்தாலும் உருக்குலைக்கப்பட்ட தமிழீழ பிராந்தியங்களினுள் மன்னார் மாவட்டமும் ஒன்றாகும். தமிழ் பேசும் மக்களது உயிர்களும் உடமைகளும் எண்ணற்ற வகையில் பறிக்கப்பட்டு தம் சொந்த மண்ணிலிருந்தே விரட்டியடிக்கப்பட்டு நாடற்றவராக்கப்பட்டுள்ளனர்.

மதவாச்சி அநுராதபுர பகுதியிலிருந்து இனவெறிக் காடையர் பெரும் எண்ணிக்கையில் மன்னாரில் குவிக்கப்பட்டு நன்கு திட்டமிடப்பட்டு எம் மக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டது. எம் சகோதரிகள் கற்பழிக்கப் பட்டனர். எம் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். ஈற்றில் தாம் பிறந்து வளர்ந்த தம் சொந்த மண்ணிலிருந்தே விரட்டியடிக்கப் பட்டனர். மன்னார் மக்களின் முழு துன்ப துயரங்களுக்கும் முழுப் பொறுப்பும் சூத்திரதாரிகளும் தள்ளாடி இராணுவ முகாமும் மன்னார் பொலிஸ் நிலையமுமாகும்.

பூரண பாதுகாப்போடு நன்கு பலப்படுத்தப் பட்டிருந்த தம்மை, முறியடிக்க முடியாது என்ற சவாலோடு தான் தோன்றித்தனமாக இராணுவத்தினரும் பொலிசாரும் செயற்பட்டு வந்ததை வேதனையை சொந்தமாக கொண்ட மன்னார் மக்கள் நன்கறிவர்.

எம் மக்கள் கொன்று குவிக்கப்பட எம் சகோதரிகள் கற்பழிக்கப்பட எம் மக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட எம் மக்கள் அகதிகளாக்கப்பட மூலவேராக இருந்து செயற்பட்டு வந்த மன்னார் பொலிஸ் நிலையம் 9-5-85 அன்று எம்மால் தாக்கப்பட்டது.

நள்ளிரவு வேளையில் மன்னார் பொலிஸ் நிலையம் மீதான மின்சாரம் தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டது. கிலி கொண்ட கொமாண்டோ பொலிசார் ஜெனரேற்றரை இயக்க ஆரம்பித்த போது குறிதவறாத விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலால் மன்னார்ப் பொலிஸ் நிலையம் ஆட்டம் காணத் தொடங்கியது. மிக நுணுக்கமாக திட்டமிடப்பட்டு நவீன ரக ஆயுதங்களுடன் ஐம்பதிற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளின் வீராவேசம் மிக்க தாக்குதலால் அரை மணி நேரத்தினுள் பொலிஸ் நிலையம் புலிகள் வசமாகியது. பல கொமாண்டோக்கள் கொல்லப்பட்டு சிலர் சிறை பிடிக்கப்பட்டு ஏனையோர் உயிர் பிழைக்க தப்பி ஓட முழு பொலிஸ் நிலையமுமே புலிகளின் பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது. பொலிஸ் நிலையத்திலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட துப்பாக்கிகள், வெடிமருந்துகள் கைக்குண்டுகள், துப்பாக்கி ரவைகள் எம்மால் கைப்பற்றப்பட்டன.

இவற்றோடு பொலிஸ் நிலையத்திலிருந்த ஆவணங்கள், பொருட்கள் சகலதுமே கைப்பற்றப்பட்ட பின் பொலிஸ் நிலைய கட்டடங்களான,

1. பொலிஸ் நிலைய காரியாலயம்
2. பொலிஸ் உப அதிபர் காரியாலயம்
3. பொலிஸ் உப அதிபர் விடுதி
4. பொலிஸ் விடுதி
5. கொமாண்டோக்கள் புதிய காரியாலயம்
6. கொமாண்டோக்கள் விடுதி
7. கொமாண்டோக்கள் வாடி வீடு

ஆகிய அனைத்துக் கட்டடங்களுமே எம்மால் தகர்க்கப்பட்டன.

இரு புறமும் கடலால் சூழப்பட்டு தள்ளாடி இராணுவ முகாமிற்கண்மையில் மிகப் பாதுகாப்போடு பலப்படுத்தப் பட்டிருந்த மன்னார் பொலிஸ் நிலையம் மீதான வெற்றிகரமான தாக்குதலைத் தொடர்ந்து இன வெறி பிடித்த இராணுவத்தினரும் மதவாச்சி, அநுராதபுரக் காடையரும் பெருமளவு கிலி கொண்டுள்ளனர்.

இப் பொலிஸ் நிலையத் தாக்குதலில் முன்னணியில் நின்று போராடிய எமதியக்க போராளியான ராஜன் (சபேசன்) வீரமரணமடைந்தான்.

மன்னார் பொலிஸ் நிலைய தாக்குதலில் எம் தோழர்களின் மன உணர்விலிருந்த தற்தியாகத்தோடு கூடிய வீரமிக்க மனோவலிமையே எமக்கு உறுதியான வெற்றியை தேடித்தந்தது.

இராணுவ கெடுபிடிமிக்க மன்னாரிலே வெவ்வேறு காலகட்டங்களில் வீரமரணமடைந்த எமதியக்க போராளிகளான

சுதாகர் (நிதி) மன்னார்
ராஜசிங்கம் (ஜெரால்ட்) மன்னார்
ஞானப்பிரகாசம் (பிரிஸ்) பரப்புக்கடந்தான்,
மேயல் றெகூவாஸ் (விஜி) பாப்பாமோட்டை,
குமாரசாமி (குமா) கறுக்காதீவு.

ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் வீர வணக்கத்தை தெரிவிக்கின்றார்கள். வீரம் மிக்க எம் தோழர்களின் தியாக வாழ்வு எம்மால் மறக்க முடியாத தொன்றாகும். ஆனால் எம் தோழர்களின் மரணங்கள் எமக்கு சோர்வையோ விரக்தியையோ ஒரு போதும் தந்ததில்லை, மாறாக அவர்கள் எவ் இலட்சியத்திற்காக மரணித்தனரோ அதற்காக இன்னும் உற்சாகத்தோடும் உத்வேகத்தோடும் போராடும் மன உறுதியையே தந்திருக்கின்றன.

இறுதியாக தமிழ் பேசும் மக்களுக்கு!
விடுதலைப் போராட்டத்தில் இழப்புகள் தவிர்க்க முடியாததாகும். மறைந்துபோன எம் போராளிகளுக்கும் எம் மக்களுக்கும் நாம் செய்யும் கௌரவங்களும் அஞ்சலிகளும் தமிழ்ப் போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுப்பதாகும்.

இராணுவத்தினர்க் கெதிரான பின்வரும் தாக்குதல்களை நாமே மேற்கொண்டோம்.

1. 3ம்பிட்டியில் (1984 ஆவணியில்) இரு ஜீப் வண்டிகள் சேதமாக்கப்பட்டு 15 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.
2. 11ம் கட்டையில் (1984 மார்கழி) ஒரு இராணுவ வாகனம் சேதமாக்கப்பட்டு 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.


# இரத்தம் + வியர்வை + கண்ணீர் = தமிழீழ நாட்டின் விடுதலை.

# தமிழீழப் பிரதேசங்களில் விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம்கள் ! !


தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கம் (பிரித்தானியக் கிளை)
பெருமையுடனும் , மகிழ்ச்சியுடனும் வழங்கும்
படக்காட்சி
*******

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொமாண்டோப் பயிற்சியைச் சித்தரிக்கும் வர்ணப்படக் காட்சி!

SAS , MOSSAD கலிப்படைகளால் பயிற்றுவிக்கப்பட்ட சிங்கள இராணுவத்தை திணறடிக்க வைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரமிகுந்த போர்ப்பயிற்சிகளைக் கண்டறிய அரியதோர் சந்தர்ப்பம்!!

"இனியொரு விதி செய்வோம்......"

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்







வாரீர் ........ திரண்டு வாரீர்.....

காண்பீர் ... புலிகளின் போர்ப்பயிற்சிகளை

இடம்.... MAHATHMA GANDI HALL
Y.M.C.A.
41, FITZROY SQUARE,
LONDON W1 .

காலம்...26-08-1985(திங்கட்கிழமை).
நேரம்...மாலை 5.30மணி.
NEAREST TUBE:- WARRENT STREET

பிரவேசம் ........ அன்பளிப்பு ஒரு பவுண் ( £1 )

## இலங்கை தமிழர் இன்னல்களை

# உலகிற்கு உணர்த்த சர்வதேச குழு அமைக்கப்பட்டது

இலங்கையில் தமிழ் மக்கள் விஷயத்தில் மனித உரிமைகள் மிதிக்கப்படுவதையும், சட்ட திட்டங்கள் புறக்கணிக்கப்படுவதையும் உலகத்தின் கவனத்துக்குக் கொண்டு வர முயற்சி நடைபெற்று வருகிறது.

மனித உரிமைகளிலும் சட்ட திட்டங்களிலும் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு சர்வதேச அவசர நிலைக் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

எம்.பி.யும் வெளிநாட்டு விவகார மேம்பாடு முன்னாள் அமைச்சருமான டேம் ஜூடித் ஹார்ட், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த செனெட்டர் மியன், இந்தோனேஷியா மனித உரிமை வழக்குரைஞர் புயாங் நசுடியான், அரபு வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் சுபேரஹ் மான் யூசோபி முதலானோர் கமிட்டியில் அங்கம் வகிக்கிறார்கள்.

இக்கமிட்டி இலங்கை அரசுடனும், பல்வேறு இலங்கைத் தமிழ் நிறுவனங்களுடனும் அகதிகள் குழுவுடனும் சம்பந்தமுள்ள அரசு நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளும்.

இனப்பிரச்சினைகள் குறித்து உலகின் கவனத்தைத் திருப்புவதற்காக தொடங்கப்பட்டுள்ள அனைத்து நாடுகள் முயற்சிகளில் நோபல் சமாதான பரிசு பெற்ற அறிஞர் பிஷப் டெஸ்மாண்டுடுடு, ஐ.நா.வில் முன்பு அமெரிக்க பிரதிநிதியாக இருந்த ஆண்டுரு யங் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த முயற்சியில் முதல் நடவடிக்கையாக இலங்கைப் பிரச்சினைக்கான கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் மனித உரிமைப் பிரிவின் முன்னாள் டைரக்டர் தியோவான் போவன், இந்த அமைப்புக்கு தலைவராக இருக்கிறார்.

இககமிட்டியின் முதல் பணி, இதே போன்ற இனப்பிரச்சினைகள் சம்பந்தமாக உள்ள தகவல்களைத் திரட்டுவதாகும். இப்போதைக்கு இக்கமிட்டி இலஙகை செலலும் எண்ணம் இல்லை.

இனவேறுபாடு வன்முறைக் கலவரங்களுக்கு இலங்கை ஒரு துல்லியமான எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்று சவுதி, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, ஹாலந்து ஆகிய நாடுகளிலிருந்தெல்லாம் இந்த முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை கமிஷனுக்கு 8 மனித உரிமை நிறுவனங்கள் ஒரு மகஜர் அனுப்பியுள்ளன. இலங்கை இனக் கலவரம் குறித்தும், வன்முறை மூலம் தீர்வு காண முற்படும் போக்கு பற்றியும் அவை கவலை தெரிவித்துள்ளன. தமிழ் மககள் படுகொலை செயயப்படுவது பறறியும் இலங்கையிலிருந்து தமிழர்கள் தொடர்ந்து வெளியேறியது பற்றியும் அவை கவலையும் வருத்தமும் தெரிவித்துள்ளன.

தமிழர் வாழும் பகுதிகளில் சிங்களரை அதிக அளவில் குடியேற்றும் முயற்சிகள் குறித்தும் மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமை பற்றிய சர்வதேச சம்மேளனம், அரபு வழக்குரைஞர் சங்கம், உலக மாணவர் கிறிஸ்துவ சம்மேளனம், சர்வதேச கத்தோலிக்க இயக்கம் ஆகியவைதான் இந்த மகஜரை அனுப்பியுள்ளன.

## வானொலியில் வீர இசை 'விடுதலைப் புலிகள்'

# 'நம்புங்கள்-தமிழீழம் நாளை பிறந்திடும்'

''நம்புங்கள்; தமிழ் ஈழம் நாளைப் பிறக்கும்'' என்ற பாடலை விடுதலைப்புலிகளின் வானொலி ஒலி பரப்பியது.

ஒலிபரப்பைச் செவிமடுத்து-மெய்சிலிர்த்த தோழர் செட்டிநாடு எம். ராமதாசன் 'விடுதலைக்கு' விடுத்துள்ள மடல் வருமாறு :

'தமிழனுக்கென்று ஒரு தனி தாயகம அமையப் போராடி வரும் விடுதலை இளம் புலிகள், தங்கள் சாதனைகளை பலவாறாக வெளிப்படுத்தியே வருகின்றார்கள்.

எத்துணை பணிகள் இருப்பினும் அவர்கள் ஒலிபரப்பை செவிமடுப்பதே என் அன்றாட பணி என்றாலும் .... பலநாள் கட்குப்பின் 2-5-85 அன்று அவர்களது ஒலிபரப்பை மீண்டும் துவக்கினார்கள் என்பதை தாங்கள் அறியத்தருகின்றேன்.

அன்றைய ஒலிபரப்பு சரியாக 4மணி அய்ந்து நிமிடத்தில் தொடங்கியது. (சரியாக 4-மணிக்கு சிலோன் வானொலி தனது அலைவரிசையை மாற்றும்போது....ஒலிபரப்பப்பட்ட அதே இடத்திலிருந்து புலிகளின் குரலை நாம் கேட்கலாம்)

''புலியே புறப்படு' என்ற பாடலும்- நம்புங்கள்; தமிழ் ஈழம் நாளைப்பிறக்கும் என்ற பாடலும் ஒலி பரப்பப்பட்டன.

இடையில் - தமிழ்-முஸ்லீம் கலவரம் பற்றிய அறிக்கையும், 27-4-85 அன்று விடுதலை புலிகள் நடத்திய தாக்குதலில் 24 ராணுவ வெறியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது பற்றியும் அறிவிக்கப்பட்டது.

தமிழ்-முஸ்லீம் கலவரம் இஸ்ரேலிய மொசாத் கூலிப் படைகளால் கட்டவிழ்க்கப்பட்டது என்றும், ஈழம் காண இணைந்து போராடும் தமிழ் முஸ்லீம் இளைஞர்களிடையே வெறுப்பைதூண்டவும்பரப்பப்படுகிறது. யாரும்பலிகடாவாக வேண்டாம் என்றும் கூறப்பட்டது.

சமீபத்திய வெற்றிகரமான தாக்குதல்களிலும் அதிரடிகளிலும் ஒரு 'புலி'யைக்கூட நாங்கள் இழக்கவில்லை என்றும் பெருமையாக கூறப்பட்டது.

இந்த ஒலிபரப்பை தினமும் மாலை 4-மணிக்கு சிறறலை 49 மீட்டரில் (சிலோன் ஒலிபரப்பும் இடம்) தினமும் கேட்கலாம்.

5 நிமிடம் அல்லது 10 நிமிடம் வரை தாமதம் ஆகலாம்.

இருந்தாலும் 'புலிகளின் குரலைக் கேட்பது நமக்கு என்ன தயக்கமா!'

'புலிகளின் தாகம் தமிழ்ஈழத் தாயகம்' என்று ஒலிபரப்பை முடிக்கிறார்கள்''

-இவ்வாறு அத்தோழர் எழுதியுள்ளார்.

## ஒரு நாடு ரத்தம் சிந்துகிறது

இலங்கை ராணுவம் ஒன்றுமறியா அப்பாவித் தமிழர்களை சுட்டுக் கொல்லுதல் வீடுகளுக்கு தீவைத்தல், வெடிகுண்டு வீசி கிராமங்களை அழித்தல் ஆகியவற்றை தனது கடமை போன்று செய்தது பற்றி பத்திரிகைகளில் படித்திருப்போம். அவற்றை படம் எடுத்து ஒரு நாடு ரத்தம் சிந்துகிறது என்ற தலைப்பில் சிறுநூலாக ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளது தமிழ்ஈழ விடுதலை புலிகள் இயக்கம். (எ நேஷன் ப்ளீட்ஸ்)

இதில் வல்வட்டித்துறை, அரியாலை, குரிக்கடுவன் ஆகிய ஊர்களில் நிகழ்ந்த இனப் படுகொலை காட்சிகளையும், திருமணமான அன்றே ராணுவத்தின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியாகி, மரணத்திலும் ஒருவரையொருவர் கையைப் பிடித்தபடி கிடக்கும் காட்சியும் நமது மனதை உருக்குகிறது.

மேல் அட்டையில், சிங்கள ராணுவத்தின் துப்பாக்கி குண்டுகளை நெஞ்சில் ஏந்தி உயிர் துறந்து கிடக்கும் பச்சிளம் குழந்தையைப் பார்க்கும் கல் நெஞ்சமும் கரைந்துவிடும்.

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம்
SOLT

# அம்மாவுக்கு....ஒரு மடல்!

அன்புள்ள அம்மாவின்....
அடிகளுக்கு....என் வணக்கம்!
உன்னன்பு மகனின்றும்....
உயிருடன் தானிருக்கின்றேன்!
அங்குள்ள நிலைமையில் நீ....
எப்படித்தான் இருப்பாயோ?
அறியாமற்....திகைத்திருந்த....
அன்பு மடல் கிறுக்குகின்றேன்!

ஐம்பது வயதினிலே....
அருந்துணையைப் பறிகொடுத்துக்....
கைம் பெண்....ஆகிய நீ....
காலத்தின்....கைதியம்மா!
உன்பிள்ளை....நானுங்கூட....
உனக்குக்....கிடைக்காமல்....
இன்று....தவிக்கின்றாய்....
இயற்கை....செய்த....கொடுமையிது!

சொல்வாயே....பலதடவை....
'சுமந்து பெற்ற உரிமைக்கு....
அள்ளித் தர வேண்டாம்!
ஆசைக்குப் பிள்ளை யெனக்....
கொள்ளி வைத்தாவது போதும்!
குடிப்பதற்கு....நீர் போதும்!'
சொல்வாயே....அம்மா....
சுகந் தந்து அணைத்தபடி!
வெள்ளை....மலர்ச்சரமே!
விதியுன்னை விரட்டுதடி! பி
பிள்ளை யுனக்கில்லை!
பிடி சாம்பராகி விட்டான்!

சொன்னாயே....அன்றும்....
சோறு....கறி....போடுகையில்....
என்னாசைச் செல்வம் நீ!
எங்கோடிச் செல்கின்றாய்?
என்னாகும்....உன்வாழ்வு?
என்றெல்லாம் அழுதாயே!
என்னம்மா....சொல்வேன்?
என்னாட்டின்....விதியென்பேன்!

அன்றிரவு....கள்வனைப் போல்....
அடுக்களையில் நான் புகுந்து....
உன்வரவு....பார்த்தங்கு....
உறியடியில் நின்றிருந்தேன்!
என்னரவங் கேட்டவுடன்....
தட்டுத்....தடுமாறிக்....
கண்ணொளியில் நடந்தாய் நீ....
கண்ணீரில்....நனைந்தேன் நான்!

உன்கையாற் சமைத் தவற்றை....
உண்பதிலே....கோடி சுகம்!
அன்பை நீ....உணவாக்கி....
ஆசையிலே....குழைத்திடுவாய்!
அன்றைக்கும்....அப்படியே....
உன்கையால்....நானுண்டேன்!
என்றைக்கு....உனைக் காண்பேன்....
என்றெல்லாம் நினைத்திட்டேன்!

தள்ளாத வயதினிலே....
தடுமாறும் நடையோடு....
உள்ளமெல்லாம்....நடுநடுங்க....
உத்தரவு தந்தாய் நீ!
நல்லவளே! நானுனை....
நடுக்கடலில் விட்டு விட்டுக்.
கல் மனதைச் சுமந்து கொண்டு....
நள்ளிரவில் நடந்தேனே!

நல்லவனாய்....வல்லவனாய்....
நாடு பல மெச்சுவதற்குப்....
பள்ளி செல்ல வைத்தாயே!
பாவம் நீ....படுபாவம்!
கள்ளமாய்....உயிர் தப்பி....
ஊர்விட்டு ஊர்மாறி....
வள்ளங்க ளேறி....
வந்து விட்டா னுன்பிள்ளை!

புறப்பட்டேனன்று!
புகலிடத்தை யறியாமல்!
சிறைப்பட்டுக்கிடந்த....
சிட்டுக்குருவி....சிறையுடைந்து....
புறப்பட்டுப்....பறப்பதுபோற்....
புறப்பட்டேனன்று!
இறப்பிற்கும்....வாழ்விற்கும்....
இடையுயிர் சுமந்தேன்!

உயிர் நீக்கும் அந்த....
ஓரினத்தின் பேர் சொல்லி....
உயிர் தப்பி வாழ....
உலகத்தின் துறைகளிலே....
நிரையாக....நிற்கும்....
நிலைமைக்கு....நான் வந்தேன்!
தருவார்கள்....தஞ்ச மெனத்....
தாழ்வுற்று....வார்கின்றேன்!

என்னம்மா! அம்மா!
என்னைப் பெற்ற....பொன்....மகளே!
அழுகின்றேனின்று!
அழுகின்றேன்....நானம்மா!
என்னன்புத் தாய் மண்ணை....
என்னரிய தாய் மொழியை....
இன்னற் பட விட்டு....
ஏனோடி வந்தேனோ?

பொய் சொல்லிப் பிச்சை....
கேட்டு வந்தே னென்பது போல்....
வைகின்றார்....இங்கே....
வாய்பேசத் தெரிந்த பலர்!
கைதேர்ந்த....அரசியலாளர்....
கருணையின்றிப் பேசுகிறார்!
உய்வில்லை....யென்றே....
உரைக்கின்றார்....வேறு சிலர்!

உலகத்து....அகதிகளின்....
பட்டியலில்....உன்பிள்ளை....
இடங்கேட்டு....நின்றான்!
இழிப்புரைகள்....பல கேட்டான்!
பல கேள்வி....கேட்டார்கள்....
பல்லிளித்துப்....பிச்சைக்குத்....
தலைகுனிந்து....நின்றேன்....நான்!
தனிமையிலே....தானழுதேன்!

வேண்டும்! எனக்கின்றும்....
வேண்டு மென நினைத்தேன்!
கூண்டுக் கிளிகளெனக்....
கொடியவரின்....ஆட்சியிலே....
மாண்டு....மடிகின்ற....
மணித்தமிழர்....தளம் விட்டு....
ஈண்டு....ஏன் வந்தேன்?
இதயமின்றி....ஏன நடந்தேன்?
வேண்டும்....எனக்கின்றும்....
வேண்டுமென நினைத்தேன்!

இளந்தமிழர்....போர்ப்படையில்....
இணைந்தேனோ?...ஒரு புலியாய்!
களங்காணும் தீரத்தைப்....
பயின்றேனோ?....பாசறையில்!
கலங்கி யொரு....உயிர்தப்பிக்....
கடல் கடந்து வந்தேன்!
நலங்கருதி....என்னுயிரை....
நானேந்தி....நின்றேன்!

உழைத்துப்....பிழைக்கின்ற....
ஒரு கூட்டம்....தமிழ்க் கூட்டம்!
களைத்து....வந்து....கஞ்சியையும்....
குளித்துக்....குடிப்பவர்கள்!
மலைக்கின்றே....னம்மா....நான்....
உழைப்பதற்கு....முடியாமல்....
அறைக்குள்ளே....முடங்கியோ....
அழுக்குடையில்....வாழ்கின்றேன்!

அகதி நான்! உலகில்....
அகதி நானென்றே....
முகவரி....கொடுத்தே....
வழி....நடக்கின்றேன்!
அகமெலாம்....இருண்டு....
அந்நியமண்ணில்....
பகலிலும்....முடங்கிப்....
படுத்திருக்கின்றேன்!

தோல் வெறி கொண்டு....
'ஊ ரப்போ' என்ற....
காலினால் உதைத்துக்....
காறியே....துப்பும்....
கீழ்மைகள்....கண்டும்....
கொதித்திட மறந்து....
தாழ்வுடன்....வாழும்....
தகைமையை அடைந்தேன்!

பங்கயமணாளன்

தொடரும்...

# தமிழ் இனத்துரோகி ஆனந்தராஜன் சுடப்பட்டது சம்பந்தமாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் வாசுகியால் வெளியிடப்பட்ட அறிக்கை.

A NATION BLEEDS



சர்வதேச ரீதியில் இனம் முழுவதையும் காட்டிக் கொடுத்த துரோகியும், சிறீலங்கா இனவெறி அரசின் தீவிர விசுவாசியும், இனவெறி இராணுவத்தின் நெருக்கமான நண்பருமான ஏ.ஆனந்தராஜன் 26.06.85 அன்று எம்மால் சுட்டுக் கொல்லப்பட்டார். எம் விடுதலை இயக்க வரலாற்றில் நாம் தீர்க்கமாக ஆராய்ந்த முடிவுகளையே எடுத்து அவற்றை உறுதியுடன் செயல்படுத்தி வருகிறோம். சமுதாயத்தின் மேல் மட்டத்தில் உள்ள துரோகிகள்; தம் ஆளுமையாலும், ஆற்றலாலும், சமுதாய அந்தஸ்தாலும், பணச்செருக்காலும் செய்யும் துரோகத் தனங்கள் மூடி மறைக்கப் படுகின்றன. தமிழ் இனத்திற்கு செய்த துரோகங்களை இவர்களின் ஆதரவு சக்திகள் மனரீதியாக அறியாமல் இருக்கலாம். ஆனால் தமிழ் பேசும் மக்கள் உறுதியாக அறிந்தே இருக்கின்றனர். இந்த வகையில் முல்லைத்தீவு அரச அதிபர் க.ஞானச்சந்திரன், பாலசுந்தரம் ஆகியோர் எம்மால் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டனர். இந்த வகையில் வெளிப்பார்வைக்கு சமுதாய செல்வாக்குள்ள துரோகிகள் எம்மால் இனம் காணப்பட்டே வந்திருக்கின்றனர்.

இந்த வகையிலே எம்மால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆனந்தராஜனையும் இனம் காட்ட நாம் கடமைப்பட்டுள்ளோம். இந்த ஆனந்தராஜன் ஆரம்பத்திலிருந்தே எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு முழு விரோதமான வகையிலே செயல்பட்டு வந்திருக்கின்றார். சில உதாரணங்களை அதற்கு நாம் சொல்லும்போது எந்த இயக்கங்களைச் சேர்ந்த போராளிகளாக இருந்தாலும் இவரது சென். ஜோன் கல்லூரிக்கு கூட்டங்கள், கருத்தரங்குகள் நடாத்துவதற்கு செல்லும்போது அதற்கு இவர் எக்காரணம் கொண்டும் அனுமதிப்பதில்லை. அனுமதி அளிக்காததற்கு இவர் கூறும் காரணம் மாணவர்கள் அரசியல் பேசக்கூடாது. அரசியலிலே ஈடுபடுவதன் மூலம் இவர்களுடைய கல்வி பாழாகக் கூடாது என்பது ஆகும். ஆனால் இனவிடுதலைக்கு சார்பான அரசியல் கற்கக்கூடாது மாணவர், என்று கூறும் இவர் இவரது கல்லூரியிலேயே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை கேவலமான முறையிலே கொச்சைப் படுத்தி, தமிழீழ விடுதலை இயக்கங்கள் தமிழீழம் அமைத்தால்கூட தமக்குள் அடிபட்டு தமிழினமும் அழிந்து இவ் இயக்கங்களும் அழிந்துவிடும் என்று கொச்சைப் படுத்தக்கூடிய கருத்துக்களைக் கொண்ட 'விசுவாச கப்பல்' என்னும் ஒரு நாடகத்தை, இதைப்போல பல நாடகங்களை நடாத்துவதற்கு ஊக்கமளித்து மாணவர்களுடைய மனங்களிலே விஷக்கருத்துக்களை தூவியிருக்கிறார். இனவிடுதலைக்கு சார்பான அரசியல் மாணவர்களுடைய கல்வியை குழப்பும் என்னும் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான முறையிலே மாணவர்களை அரசியல் மயப்படுத்துவது மாணவர்களுடைய கல்வியை வளர்க்கும் என்பது இவரது கருத்தாகவே இருந்து வந்துள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இவரது பங்கு விடுதலைக்கு விரோதமான முறையிலே இருந்திருக்கிறது.







சில மாதங்களுக்கு முன்பு தமிழீழத்திலே ஒரு நிலை இருந்தது உங்களுக்குத் தெரியும். வீதிகளிலே காணப்படுகின்ற இளைஞர்களை இராணுவம் கண்டால் கண்ட இடங்களிலே சுட்டுத்தள்ளுவதும் அல்லது அடித்து விரட்டுவதும் அல்லது இராணுவ வாகனங்களால் மோதி கொல்வதும் ஒரு வழமையான நிலையாக இருந்த காலகட்டத்திலே இவரது சென் ஜோன்ஸ் கல்லூரி 5 அடி மதிலை இளைஞர்கள் இராணுவத்தைக் கண்டால் அம்மதிலால் பாய்ந்து ஓடுகிறார்கள் என்ற காரணத்திற்காக 7 அடி உயரமாக உயர்த்தி அதன்மேல் போத்தல் ஓடுகளை இட்டு இளைஞர்கள் தப்புகின்ற சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்ததன்மூலம் எத்தனையோ இளைஞர்கள், இயக்கப் போராளிகள்கூட இராணுவத்திற்கு இரையாவதற்கு இவர் காரணமாக இருந்தார். இதுபற்றி இவரிடம் பேச செல்கின்ற இயக்க போராளிகளாக இருந்தாலும்சரி, பொது மக்களாலும்சரி இவர் அலட்சியப்படுத்தி விடுதலை இயக்கங்களில் உள்ளவர்கள் எல்லாம் கல்வி அறிவில்லாத மூடர்கள் என்ற ரீதியிலும் ஒழுங்கான குடும்பங்களை சேர்ந்த எவரும் விடுதலை இயக்கங்களிலே இல்லை என்ற ரீதியிலும் பேசி விடுதலை இயக்கங்களை, எம்மைக்கூட கேவலப்படுத்தியிருக்கின்றார். இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் இவரது இன்னோர் நடவடிக்கை அமைந்துள்ளது.

இன்று இராணுவ முகாம்களிலே எமது சகோதரிகள் சிங்கள வெறியர்களால் கற்பழிக்கப்பட்டு உடலிலே துணிகூட இன்றி நிர்வாண கோலங்களில் அலங்கோலப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எம் இளைஞர்கள் கடும் சித்திரவதைகளால் கண்ணிழந்து, காலிழந்து துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். வல்வெட்டித்துறையிலே வரிசையிலே நிறுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள் எத்தனைபேர்- கட்டிடத்தின் உள்ளே வைத்து குண்டு வைத்து சிதறடிக்கப்பட்ட தமிழர்கள் எத்தனை பேர்-வல்வெட்டித்துறையிலே கற்பழிக்கப்பட்ட பெண்கள் எத்தனை பேர்- பருத்தித்துறையிலே கெடுக்கப்பட்ட பெண்கள் எத்தனை பேர்-எரிக்கப்பட்ட வீடுகள் எத்தனை.

நெடுந்தீவுக் கடலிலே மூன்று வயதுக் குழந்தையைக்கூட குத்திக் கொலை செய்த குரூர வெறி பிடித்த சிங்கள இராணுவத்துடன் சினேகபூர்வமாக கால்பந்தாட்டம் நடாத்தப்படுகின்றது. கோட்டை முன்றலிலே, கோட்டை மைதானத்திலே எமது இளைஞர்கட்கும், சிங்கள இராணுவத்திற்கும் சினேகபூர்வ ஆட்டம் நடைபெறுகிறது. கோட்டைச் சிறைக்குள்ளே எமது பெண்கள் கற்பழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் தினம் தினம். நாம் இவ்விடயம் சம்பந்தமாக இவரை அணுகி இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென மனிதாபிமான முறையில் கேட்டுக் கொண்டும்கூட இவர் இதற்குச் சொன்ன பதில், "விடுதலை இயக்கங்கள் பற்றி எனக்கு அக்கறை இல்லை. விடுதலை இயக்கங்களிலே நம்பிக்கையில்லை. நான் அரசாங்கத்திற்கும்-எமது மக்களுக்கும் நல்லுறவையே வளர்க்கப் பாடுபடுகிறேன். தொடர்ந்தும் நான் எத்தனையோ கால்பந்தாட்டம், கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களை ஒழுங்குபடுத்திக் கொடுப்பேன். நீங்கள் என்ன சொன்னாலும் அதைப்பற்றிக் கவலை இல்லை" என்று சொன்னார்.







உண்மையான இவரது நோக்கம் இராணுவ-பொதுமக்கள் நல்லுறவுதான் என்று இருந்தால் இவர் இன்று இராணுவ முகாம்களில் இராணுவ வெறியர்களின் சதைவெறிக்கு இரையாகிக் கொண்டிருக்கும் எமது சகோதரிகளை விடுவித்திருக்கலாம். இராணுவ முகாம்களிலே சித்திரவதைப்படும் எமது இளைஞர்களை விடுவித்திருக்கலாம். அதை விடுத்து இவரது செயல்பாடுகள் இராணுவத்திடம் எமது மாணவர்களை விற்று அந்தச் சிங்கள இராணுவம் எமது மாணவர்கள் மூலம் எம்மிடையே உளவாளிகளை ஊடுருவ விட்டு முழுப்போராளிகளையும் அழிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தையே ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அதுமட்டுமல்ல, இன்று இராணுவம் யுத்த ரீதியிலும் சூட்பலத்திலும் தன்னைத் தயார் படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே இவர்கள் விளையாடும்போது எடுக்கப்பட்ட வீடியோ திரைப்படம் சர்வதேச அரங்கிலே சிங்கள இராணுவம் தமிழ் மக்களுடன் சிநேகபூர்வமாக இருக்கிறது என்னும் பிரச்சாரத்தை வலுவூட்டுவதற்காக காட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஏனைய இயக்கப் போராளிகள்கூட இவரை அணுகி இப்படி நடந்து கொள்ள வேண்டாம் என்று கேட்ட போதெல்லாம் இவர் போராளிகளை அலட்சியப்படுத்தியே வந்துள்ளார்.

அரசாங்கத்தின்மீது இவர் கொண்ட விசுவாசத்தையும் இனத்திற்கு எதிராக செயல்பட்டதையும் சிறீலங்கா அரசு வானொலியே மிக நன்றாக ஒலிபரப்பியது. இன்று பாடசாலை விடுமுறை. இவரின் துரோகத்தனத்திற்கு அரசாங்கத்தின் அஞ்சலியே இவ்விடுமுறை. இன்று ஆனந்தராஜன் கொலை செய்யப்பட்டு விட்டார் என்றவுடன் கல்வி கோபுரம் சாய்ந்துவிட்டது, ஒரு முழுமையாக தன்னை அர்ப்பணித்த தியாகி மறைந்து விட்டான் என்றெல்லாம் பிரசுரங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆனந்தராஜனின் மறைவுக்காக, ஏழைத் தொழிலாளர்கள் செலுத்துகின்ற மிதிவண்டிகள், உழவுயந்திரங்கள் முதலியவற்றில்கூட கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு ஏதோ ஆனந்தராஜனின் மறைவால் தமிழீழமே சோகத்தில் ஆழ்ந்துள்ளது போன்ற ஒரு வெளித்தோற்றம் குறிப்பிட்ட ஒரு குழுவால் காட்டப்படுகிறது. சிங்கள இராணுவம் ஹெலிகொப்டரில் இருந்து துண்டுப்பிரசுரம் வீசி எறிவதைப் போன்று கல்லூரி வாசலிலே நின்று போகின்ற வருகின்ற வாகனங்களில் எல்லாம் கறுப்புக்கொடியைக் கட்டிவிடுவதன் மூலம் இப்படி ஒரு தோற்றத்தை ஏற்படுத்திவிடலாம் என்று இந்த குழு கனவு கண்டு கொண்டிருக்கிறது. சிங்கள அரசு பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவித்து பாடசாலைகள் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதான ஒரு தோற்றத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே இவர்களது இச்செயல் சிங்கள அரசாங்கத்திற்கு வக்காலத்து வாங்கி சர்வதேச அரங்கிலே சிங்கள அரசுக்கு சார்பாக நடந்த ஒரு துரோகி கொல்லப்பட்டதற்கு பொதுமக்கள் எதிர்ப்புக் காட்டுகிறார்கள்-பொதுமக்கள் பகிஷ்கரிப்பு நடாத்துகின்றார்கள் என்று அரசு நடாத்துகின்ற பொய்ப்பிரச்சாரத்திற்கு வலுவூட்டுவதாகவே அமைந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால் ஒரு துரோகி கொல்லப்பட்டதற்காக, ஆனந்தராஜன் கொல்லப்பட்டதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளை வெறுத்து, தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழிப்போம் என்றெல்லாம் சில உரிமை கோரப்படாத துண்டுப்பிரசுரங்கள்













எல்லாம் வெளியிடப்படுகின்றது. தாய்நாட்டின் விடுதலைக்காக தம் உணர்வுகளைத் துறந்து முழுமையாக தம் உயிரைக்கூடத் தியாகம் செய்யும் அளவிற்கு இந்த விடுதலைப் போராட்டத்திலே களத்திலே நின்று இன்று தமிழினத்தின் ஒரு விடிவிளக்காகத் தெரிகின்ற போராளிகளை ஆனந்தராஜனின் மரணத்திற்காக தமிழ் மக்கள் வெறுக்க வேண்டும் என்று சொல்கின்ற, ஆனந்தராஜனின் எடுபிடிக்கும்பல், துணிவிருந்தால் தமிழ் மக்கள் மத்தியில் சென்று அந்தத் துண்டுப்பிரசுரங்களை பகிரங்கமாக வெளியிட்டும். அப்போது ஆனந்தராஜன் யார்? தமிழீழ விடுதலைப் புலிகள் யார்? போராளிகள் யார்? என்பது இந்த ஆனந்தராஜனின் செல்லப்பிள்ளைகளுக்கு விளங்கும்.

அரசாங்கத்தின்மீது இவர் கொண்ட தீவிர விசுவாசத்தையும், எம்மினத்திற்கு எதிராக இவர் செயல்பட்டதையும் சிறீலங்கா அரச வானொலியே மிக நன்றாக ஒலிபரப்பியது. இன்று பாடசாலை விடுமுறை. இவரின் துரோகத்தனத்திற்கு அஞ்சலியே இவ்விடுமுறை. எம்மீது திணிக்கப்பட்ட அடக்குமுறைக்கு எதிராகவே நாம் போராடி வருகின்றோம். நூற்றுக்கணக்கான எம் தோழர்களின் தற்தியாகத்தால் ஆயிரக்கணக்கான எம் மக்களின் மரணங்களினால் கட்டி வளர்க்கப்பட்டது எம் விடுதலைப் போராட்டம். எச்சந்தர்ப்பத்திலும், எக்கணத்திலும் மரணத்தை தழுவும் வாழ்வே எம்முடையது. எம் மக்களின் எதிர்கால நல்வாழ்விற்கும், சுபீட்சத்திற்குமாய்ப் போராடி வரும் இலட்சியமே எம் இலட்சியமாம். தமிழீழ மழலைகளின் எதிர்கால வாழ்விற்காக சயனைற் எனும் நஞ்சினால் தம்மைத் தாமே அழித்துக் கொண்ட விடுதலைப் புலிகள் நூற்றுக்குமேலே. மரணத்தை எக்கணத்திலும் எதிர்நோக்கிய தற்தியாகத்துடனேயே எமது விடுதலை வீரர்களின் வாழ்வு அமைந்திருக்கிறது. எவ்வித சுயமோ, சுயநலங்களோ இன்றி போராடி வரும் நாம் கொலை வெறியர்கள் அல்ல. எக்காரணமும் இல்லாமல் சரியான ஆதாரமில்லாமல் நாம் எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர்களும் அல்ல. இறுதியாக காட்டிக் கொடுக்கும் துரோகிகளுக்கும், அரசுக்கு விசுவாசமாக செயற்படுவோருக்கும் இறுதி வேண்டுகோள். இனிமேலும் இந்த நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபடாதீர்கள். உங்கள் நடவடிக்கைகளால் உங்கள் மனைவியை-எம் சகோதரியை, உங்கள் பிள்ளைகளை-தமிழீழ மழலைகளை அனாதைகள் ஆக்காதீர்கள். தொடர்ந்தும் அரசிற்கும் இராணுவத்திற்கும் சார்பாக தொழிற்பட்டு எம் இனத்திற்கு விரோதமாக செயல்படுவோருக்குத் தண்டனை இன்னும் கடுமையானதாகவே அமையும் என மிகவும் கடுமையாக எச்சரிக்கின்றோம்.

பிற்குறிப்பு:-

இவரது குடும்பத்தினருக்கு சிறீலங்கா அரசு ஐந்து லட்சம் ரூபா நன்கொடையாக வழங்கியதுடன், இவரைக் கொலை செய்தவரைப் பற்றிய தகவல் கொடுப்பவருக்கு ஐந்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.



# உணவு உற்பத்திப் போரில் ஒன்று கலப்போம்

அடக்குமுறைக்கு எதிரான உலகளாவிய விடுதலைப் போராட்டங்களில் அடக்கு முறையாளனின் ஒடுக்கு முறைகள் பல வடிவத்தில் தோற்றம் பெறுகின்றன. போராட்டத்தை ஒடுக்க எதிரி பல வழிகளை கையாளுகிறான்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பொறுத்த வரையில் எமது எதிரி ஒரு தீவிர இன வெறியன். மிகக் கொடூரமான அடக்கு முறைச் சட்டங்களை ஏற்படுத்துவதும், யுத்த தர்மம் இன்றி அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதுமே அவனது நாளாந்த செயற்பாடாயுள்ளது.

விடுதலைப் போராட்டம் வளர்ச்சிக் கட்டங்களினூடாக விஸ்தரிக்கப்பட்டு வரும் இன்றைய சூழ் நிலையில் பொருளாதார ரீதியான நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்த முனைவான். அதிலும் குறிப்பாக "பட்டினிச் சாவை" ஏற்படுத்தி போராட்டத்தின் மீது வெறுப்பையும் விரக்தியையும் தோற்றுவிக்க முயலுவான்.

இந்த வழிகளில் எமது போராட்டத்தை பொருளாதார ரீதியாக ஒடுக்கும் முதல் நடவடிக்கையாக எமது பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் முற்றாக கைவிடப்பட்டது. எமது அபிவிருத்திக்கான நிதிகள் யாவும் இராணுவ செலவீனங்களுக்கு பயன் படத்தொடங்கியது. இன்று "வீதிகள் திருத்துதல்" போன்ற அத்தியாவசிய தேவைகள் கூட, தடை விதிக்கப் பட்ட ஒன்றாய் இருப்பது கொடூரமான பொருளாதார நெருக்கடியினை தோற்றுவிக்க, எடுக்கப்பட்டிருக்கும் ஆரம்பப் படிகளாகும்.

இன்றைய சூழ்நிலையில் எரிபொருள் தட்டுப்பாடும் போக்கு வரத்து வசதியின்மையும் காரணமாக, பல்வேறு தொழில்களும் உற்பத்திகளும்பாதிக்கப்பட்டுள்ளன. உணவு ரீதியில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டிருப்பதும், மீன் பிடித் தொழில் போன்ற தொழில்கள் தடைவிதிக்கப் பட்டிருப்பதும், இனவெறி அரசின் திட்டமிட்ட "உணவு நெருக்கடியை" தோற்றுவிக்கும் நடவடிக்கையாகும்.

இவற்றில் இருந்து நாம் விடுபட, விடுதலைப போராட்டத்தை முன்னெடுக்க, நமது மழலைச்செல்வங்களை சின்னஞ் சிறுசுகளை "பட்டினிச் சாவில்" இருந்து பாது காக்க, நாம் உயிர் வாழ அத்தியாவசியமான உணவு உற்பத்தியில் ஈடுபடவேண்டும்.

உணவு உற்பத்தியில் தாவர உற்பத்தியும் கால் நடை வளர்ப்பும் முக்கியமானதாகும். தாவர உற்பத்தியில் மரவள்ளி, சீனி வற்றாளை, இராசவள்ளி போன்ற கிழங்கு வகைகளையும், பயறு, உழுந்து, கௌபி, சோயாஅவரை போன்ற அவரையினப்பயிர்களையும், சோளம், தினை, சாமை குரக்கன் போன்ற உப தானியப் பயிர்களையும், காய் கறி வகைகளையும், பழ வர்க்கங்களையும் பயிரிட வேண்டும் இவற்றோடு குடாநாட்டு விறகுத் தேவையை பூர்த்தி செய்ய இப்பில் இப்பில், சவுக்கு போன்றவற்றின் உற்பத்தியிலும் பனை, தென்னை போன்ற வளங்களின் பாதுகாப்பிலும் ஈடுபட வேண்டும். கால் நடை வளர்ப்பில் முயல், பன்றி, ஆடு, மாடு, தாரா, கோழி போன்றன வீட்டு மட்டத்தில் வளர்க்கக் கூடியன.

மேலும் பணப்பயிர்களான புகையிலை, வெங்காயம், மிளகாய் போன்றவற்றை இயன்ற வரையில் கட்டுப்படுத்தி தமிழ் மக்களை பட்டினிச் சாவில் இருந்து பாது காக்க, உணவுப் பயிர்ச் செய்கையில் கூடிய கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம். போராட்ட காலத்தில் புகையிலை வெங்காயம் மிளகாய் போன்றவற்றை தனியே உணவாக உட்கொள்ளுவதோ அன்றி சிறிலங்காவிற்கு ஏற்றுமதி செய்வதோ சாத்தியப்படாததொன்றாகும்.

இப் பொருளாதார உணவு நெருக்கடி நிலைமையினைப் பற்றி நாம் ஆய்வு ரீதியாக "உணவுஆதாரம் உயர உழைப்போம்" எனும் புத்தக வெளியீட்டின் மூலம் சுட்டிக் காட்டியிருந்தோம்.

இன்று எமது இயக்க உணவு உற்பத்திக குழு தாவர உற்பத்தியிலும் கால் நடை வளர்ப்பிலும் வேறு பல வழிகளிலும் முழு உழைப்புடன் செயலாற்றி வருகின்றது. உணவு உற்பத்திக் குழு உறுப்பினர்கள் கிராம ரீதியாக வீடுகள் தோறும் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான விதைகள் நாற்றுகள் நாற்றுத்தடிகள் (மரவள்ளிபோன்றன) பழ வகைகள் (வாழை, மா, பலா போன்றன) சிறு தானியங்கள் அவரையின வித்துகள் போன்றவற்றை வழங்கி வருகிறார்கள். வீட்டு மட்டத்தில் வளர்க்கும்கால் நடைகளை வழங்கியும் காளான் உற்பத்தியிலும் விறகுத் தேவையைப் பூர்த்தி செய்யும் மரங்களை வழங்கியும் தென்னை உற்பத்தியிலும் வேறு பல வகைப்பட்ட உதவிகளையும் செய்து வருகிறார்கள்.

இவ் உணவுஉற்பத்திக் குழுவின் முழுப்பயன்பாட்டையும் பெற்று அதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து உணவு உற்பத்திப் போரை வெற்றிகரமாக முன்னெடுக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பல்வேறு நாட்டு விடுதலைப் போராட்டங்களில் பட்டினியால் பெருந்தொகையான மக்கள் செத்து மடிந்தமையாலும், தமது நாட்டை விட்டு வெளிநாடுகளில் குடியேறத் தொடங்கியமையாலும் அந்த நாட்டு விடுதலைப் போராட்டங்கள் தோல்வியுற்றதை நாம்கருத்திற்கொள்ள வேண்டும்.

எனவே எதிரி நம்மை, தோற்கடிக்க ஓர் ஆயுதமாக உணவை பயன் படுத்துவான், ஆனால் நாம் உணவை ஓர் ஆயுதமாகக் கருதி உணவு உற்பத்திப் போரில் ஈடுபட வேண்டும். போராட்டங்களில் துப்பாக்கி ஏந்துவதற்கு நிகரானதே உணவு உற்பத்தி துறையில் பங்களிப்பதும். எனவே நாம் ஒவ்வொரு அங்குல நிலத்திலும் உற்பத்தியில் ஈடுபட்டு நம் தமிழீழவிடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்போம்.

(நன்றி:- விடுதலைப்புலிகள்; வீரவேங்கை; தினமணி; மக்கள்குரல்; மதுரைமணி; சுதேசமித்திரன்; விடுதலை; எதிரொலி; தினகரன்; தினத்தந்தி; தினசரி; அண்ணா; தீக்கதிர்; மாலை மலர்; மாலைமுரசு; தினமலர்; தினஇதழ்;

எமது வெளியீடான SOLT பற்றிய விமர்சனங்களையும் வெளியிடுவதற்கான ஆக்கங்களையும் நாம் தமிழ் பேசும் மக்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். உங்கள் விமர்சனங்களையும் ஆக்கங்களையும்

"ஆசிரியர்குழு SOLT "

என விலாசமிட்ட கடித உறையிலிட்டு எமது முழு நேர ஊழியர் எவரிடமாவது கொடுத்து விடவும்.

நன்றி.

விடுதலைப்புலிகளின் இம்மாணவர் இயக்கத்தின் பிரித்தானியக் கிளையானது 16/5/85 அன்று விடுதலைப்புலிகளால் இலண்டனில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இப் பிரித்தானியக்கிளையினது சகலவிதமான தபால் தொடர்புகள் கீழ்கண்ட முகவரிக்கே மேற்கொள்ளுமாறும், விடுதலைப்புலிகளுக்கான நன்கொடைத் தொகைகளோ, அன்பளிப்புக்களோ அல்லது விடுதலைப்புலிகளின் பிரசுரங்களின் கொடுப்பனவுகளோ காசோலைகளில் அனுப்பப்படும்போது காசோலைகளை SOLT என்ற பெயரிற்கே அனுப்பிவைக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

(ADDRESS:- SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX.)

(PRINTED PUBLISHED AND ISSUED BY SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)

(FOR PRIVATE CIRCULATION ONLY)